முச்சந்தி முரளி




"எல்லாத்தையும் இப்பிடியே வித்துச் சுட்டு சுடுகாடு ஆக்காமல் விடமாட்டினம் போல"


Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39 | வியாழக்கிழமை | பங்குனி 22 ஆம் நாள்

கதிர் : 130 | 04 ஏப்ரல் 2024 | வள்ளுவர் ஆண்டு 2055


## இலங்கையை வந்தடைந்தனர் முருகன், பயஸ், ஜெயக்குமார்

### நீண்ட விசாரணையின் பின்னர் உறவுகளுடன் சேர்ந்தனர்



**கொழும்பு, ஏப்ரல் 4**

**இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் நேற்று இலங்கை திரும்பினர்.**

11

## மயங்கி வீழ்ந்து இளைஞன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப்.4

மயங்கி வீழ்ந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை சங்கானையில் நடந்துள்ளது.

நடேசு ஜெயபானுஜன் (வயது -29) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, அறிவியல் நகரைச் சொந்த இடமாகக் கொண்ட இவர், சங்கானையில் உள்ள உறவினர் வீட்டில் தாயுடன் தங்கியிருந்துள்ளார்.

11

## இனப்படுகொலை நடந்ததை ஏற்கவேண்டும் இந்தியா

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வலியுறுத்து

வவுனியா, ஏப்.4

தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை தொடர்பில் பல தலைவர்கள் சுட்டிக்காட்டியும், இந்தியாவின் பாரதிய ஜனதாக் கட்சி அந்தவிடயத்தில் மௌனம் காக்கின்றது. தமிழர்களுக்கு எதிராக நடந்தது இனப்படுகொலை என்பதை இந்திய நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கவேண்டும்.

-இவ்வாறு காணாமல் ஆக்கப்

11


## யாழ். விமான நிலையம் தனியாரின் கைகளில்!

### அரசு தீவிர ஆலோசனை

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 4**

**யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை தனியாருக்குக் குத்தகைக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

11



## மாணவருக்கு போதைமாத்திரை யாழ்ப்பாணத்தில் 6 பேர் கைது!

### மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப்பிரிவு அதிரடிச் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.4

பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து, போதை மாத்திரைகள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் யாழ். மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

11

*தலைமன்னாரில்*

## 9 வயதுச்சிறுமி கொலை; சந்தேகநபர் தப்பியோட்டம்

வவுனியா, ஏப்.4

தலைமன்னாரில் 9 வயதுச்சிறுமி ஒருவரைத் துஷ்பிரயோகம் செய்து படுகொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் வவுனியா மருத்துவமனைக்குச் சிகிச்சைக்குச் சென்ற சமயம் தப்பியோடியுள்ளார்.

11

## இரு தேர்தல்கள் ஒரேநாளில்; ஆராய்கின்றது அரசாங்கம்!

கொழும்பு, ஏப்.4

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் என்பவற்றை ஒரேநாளில் நடத்துவது தொடர்பில் அரசுக்குள் கலந்துரையாடல் நடைபெறுகின்றது என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

11

## துயிலும் இல்லத்தின் வளைவை அகற்றப் பொலிஸ் பிரயத்தனம்

### பிரதேச மக்கள் கடும் விசனம்

யாழ்ப்பாணம், ஏப்.4

கிளிநொச்சி, முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தின் நுழைவாயிலில் உள்ள வளைவை அகற்றுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த வளைவு ஆபத்தானது என்று கூறி முழங்காவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அதை அகற்றுவதற்கான அழுத்தங்களை பிரயோகிக்கின்றார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பூநகரி பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள முழங்காவில் துயிலும் இல்லம் தற்போது தாவரவியல் பூங்காவாகப் பேணப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டு மாவீரர் தினத்தை முன்னிட்டு அந்தப் பிரதேச மக்களால் தற்காலிக வளைவு ஒன்று துயிலும் இல்ல நுழைவாயிலில் உருவாக்கப்பட்டிருந்தது.

11

## ஒரேநாளில் இரு தேர்தல்; வரவேற்கிறது மொட்டு!

கொழும்பு, ஏப்.4

ஜனாதிபதித் தேர்தலும் பொதுத்தேர்தலும் ஒரே நாளில் நடத்தப்பட்டால் அது சிறப்பாக அமையும். செலவுகளையும் கட்டுப்படுத்தலாம் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தெரிவித்துள்ளது.

மொட்டுக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்ததாவது:-

இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் என்பன

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

செய்திகள்

# வரி நிலுவை வசூலிப்பு பொறிமுறை இல்லை

## சம்பிக்க தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 4
வரி நிலுவையை வசூலிப்பதற்குரிய பொறிமுறை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இல்லை என பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது-
2023ஆம் ஆண்டு டிசெம்பரில் ஆயிரத்து 66 பில்லியன் ரூபா வரி நிலுவையாக உள்ளது. 5 லட்சம் புதிய வரிக்கோவைகளை திறக்கப்போவதாக அரசாங்கம் கூறுகிறது. அப்படியானால் இந்த கோவைகளை திறந்து ஒவ்வொரு தனி நபரிடமிருந்து வரி அறவிடுவதற்கு 32 ஆண்டுகள் எடுக்கும் - என்றார். (ஒ-6)

# தாயகச்சூழலின் அடையாளமே கார்த்திகைப்பூ

## பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஏப். 4
**தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டியில் இல்லமொன்றை அழகுபடுத்துவதற்காகக் கார்த்திகைப்பூவை வடிவமைத்த மாணவர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளமை அறிவிலித்தனம் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
தமிழர்கள் சுற்றுச்சூழலைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்திணைகளாக வகுத்து இயற்கையோடு இசைந்த வாழ்வை மேற்கொண்டு வந்தவர்கள், சங்கத் தமிழர்களால் காந்தள் என அழைக்கப்பட்ட கார்த்திகைப்பூ இப்போதும் தமிழ் வாழ்வுக்கு மிகவும் நெருக்கமான பூக்களில் ஒன்றாகவே இருந்துவருகிறது.
சங்கக்கவி கபிலர் தொடங்கி தாயகக் கவி புதுவை இரத்தினதுரை வரை கார்த்திகைப் பூவைப் பற்றிப்பாடாத புலவர்களே இல்லையென்னும் அளவுக்குத் தமிழ் வாழ்வியலில் கார்த்திகைப்பூ மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இதன் காரணமாகவே இந்தியாவில் தமிழ்நாடு கார்த்திகைப்பூவைத் தனது மாநில மலராகத் தேர்வு செய்துள்ளது.
ஸ்ரீலங்கா அரசு தனது பௌத்த பண்பாட்டுச் சூழலுக்கு அமைவாகத் தேசிய மலராக நீலோற்பலத்தையும் தேசிய மரமாக மெசுவா எனப்படும் நாகமரத்தையும் தெரிவு செய்துள்ளது. இலங்கைக்காடுகளில் ஒருபோதும் காணப்படாத சிங்கத்தைத் தேசியக் கொடியில் வாளேந்த வைத்த பின்னர் அதனால் இதுவரையில் இலங்கைக்குரிய தேசிய விலங்கொன்றைத் தெரிவு செய்யமுடியவில்லை.
இலங்கைத் தேசிய அடையாளங்கள் தமிழ் மக்களை உள்வாங்காது பௌத்த, சிங்களப் பெரும்தேசியவாதத்தின் குறியீடுகளாக அமைந்ததன் விளைவாகவே விடுதலைப்புலிகள் தேசிய மலராக ஈழத்தமிழ்ச் சூழலின் அடையாளமாக விளங்கும் கார்த்திகைப்பூவைத் தெரிவுசெய்ய நேர்ந்தது.
கார்த்திகைப்பூச்செடியிலுள்ள கொல்கிசின் என்னும் நச்சு இரசாயனம் அருமருந்துகளின் தயாரிப்பில் பயன்படுகிறது. இதன் பொருட்டுத் தமிழகத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பயிரிடப்படும் கார்த்திகைப் பூச்செடியால் பலகோடி ரூபா அந்நியச் செலாவணியாகக் கிடைத்து வருகிறது.
ஆனால், கார்த்திகைப் பூச்செடியின் சிறப்புகளை ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக்கொள்ள மறுப்பதாலேயே கார்த்திகைப் பூவுக்கு அறிவிக்கப்படாத தடையைப் பேணிவருகிறது. இயற்கை அதன் பரிணாமப்பாதைக்குக் குறுக்காக நிற்கும் எதனையும் தூக்கியெறிந்து தன் பல்லினத்தை நிலைநிறுத்தும் பேராற்றல் பெற்றது என்பதை ஸ்ரீலங்கா அரசு நினைவிற்கொள்ளவேண்டும் - என்றுள்ளது. (ம-20)

# பஸ்களில் சில்மிஷம்; பொலிஸார் நோட்டம்

கொழும்பு, ஏப். 4
பேருந்துகளில் பயணிக்கும்போது பெண்களிடம் சேஷ்டையில் ஈடுபடுபவர்களை அடையாளம் காணும் வகையில் பொலிஸ் மகளிர் பணியகத்தால் விசேட குழுவொன்று களமிறக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
பண்டிகைக் காலங்களில் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பொதுப் போக்குவரத்துச் சேவையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் சிறுவர் துஷ்பிரயோகங்களும் அதிகரித்துள்ளன என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
அதனையடுத்து நாடளாவிய ரீதியில் குறுகிய பயணம் மற்றும் நெடுந்தூரப் பயணச் சேவைகளில் பொலிஸ் பெண்கள் சிவில் உடையில் கண்காணிப்புகளை மேற்கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# அத்தியாவசியப் பொருள்கள் சதொசவில் விலை குறைப்பு

கொழும்பு, ஏப். 4
எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அத்தியாவசிய பொருள்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.
நேற்றுமுன்தினம் நடைமுறைக்குவரும் 9 அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்று லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.
அதன்படி பாகிஸ்தான் பெரிய வெங்காயம், பாகிஸ்தான் சிவப்பு வெங்காயம், கடலை, உருளைக்கிழங்கு, பால் மா, கோதுமை மா, இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள், வெள்ளை அரிசி (உள்ளூர்), சோயா ஆகிய பொருள்களின் விலையே இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## சுற்றுலாத்துறைக்காக

# பேருந்துகள் இறக்குமதி!

கொழும்பு, ஏப். 4
சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக ஆயிரம் பேருந்துகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
உல்லாசப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு இறக்குமதி செய்யப்படும் பேருந்துகள் பயன்படுத்தப்படவுள்ளன. 6 தொடக்கம் 15 பேர் வரையிலான உல்லாசப் பயணிகளை ஏற்றிச் செல்ல 750 வாகனங்களும், 16 தொடக்கம் 30 மற்றும் 30 தொடக்கம் 45 உல்லாசப் பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய 250 வாகனங்களும், இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
மின்சாரம் மற்றும் ஹைபிரிட் ரக வாகனங்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கொரோனாப் பேரிடரைத் தொடர்ந்து வாகன இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

# சீன ஆராய்ச்சிக் கப்பல்களுக்கு இலங்கை மீண்டும் அழைப்பா?



கொழும்பு, ஏப். 4
இந்தியாவின் எதிர்ப்பையடுத்து சீனாவின் ஆராய்ச்சிக் கப்பல்கள் உட்பட எந்தவொரு நாட்டினதும் ஆராய்ச்சிக் கப்பல்கள் இலங்கை கடற்பரப்புக்குள் வருவதற்கு இலங்கை அரசாங்கம் மறுப்புத் தெரிவித்திருந்த நிலையில், சீனாவுடன் கடல்சார் ஒப்பந்தத்தை பிரதமர் தினேஷ் குணவர்த்தன மேற்கொண்டுள்ளார்.
சீனாவுக்கு அண்மையில் சென்றிருந்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன, கடல்சார் மீட்பு, நிவாரணம், ஆராய்ச்சி, கடல்சார் கள விழிப்புணர்வு, கடல்சார் உயிரியல் பன்முகத்தன்மை, கடல்சார் பணியாளர்கள் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு, எதிர்காலத்தில் பகிரப்பட்ட கடல்சார் சமூகத்தை உருவாக்க நீலப் பொருளாதாரத்தில் ஒத்துழைப்பை ஆராய்தல், கடல் விவகாரங்கள் தொடர்பாக இருதரப்பும் அவ்வப்போது இருதரப்பு ஆலோசனைகளை நடத்துதல் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ-6)

# உளுந்து இறக்குமதி தடை நீக்கம்

கொழும்பு, ஏப். 4
உளுந்து இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை தற்காலிகமாக நீக்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. உளுந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் பண்டிகைக் காலத்தில் உளுந்தின் விலை அதிகரிக்கலாம் என்பதை காரணம் காட்டியே உளுந்து இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை தற்காலிகமாக நீக்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது. (ஒ-ச-6)


# போலி உதிரிப்பாகங்கள் மீட்பு

கொழும்பு, ஏப். 4
ஹொண்டா நாமத்துடன் போலி உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யப்படுவதாக அந்த நிறுவனம் செய்த முறைப்பாட்டையடுத்து மருதானை, ஹோமாகமவில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் பல்வேறு போலி உதிரிப்பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.
ஹொண்டா நாமத்துடன் விற்பனைக்குத் தயாராகவிருந்த பல்வேறு உதிரிப்பாகங்கள் மோட்டார் வாகனப் பாகங்கள் விற்பனை செய்யும் மூன்று இடங்களிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. (ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்படைக்கெதிராக ஏன் நடவடிக்கையில்லை?

## பழ.நெடுமாறன் கேள்வி



**சென்னை, ஏப். 4**

**கச்சதீவு பற்றிப் பேசும் பா.ஜ.க.வும் காங்கிரஸும், மீனவர்களைத் தாக்கும் இலங்கைக் கடற்படை மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்? என்பது குறித்து விளக்கவேண்டும் என்று உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மன்னார் வளைகுடாப் பகுதியில் இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்களை வேட்டையாடி வருகிறது.

ஆடு, மாடுகளைக் கொண்டு செல்வது போல, எமது மீனவர்களைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள். எமது மீனவர்களுக்குச் சொந்தமான இயந்திரப் படகுகள், மீன்வலைகள் போன்றவை பறிமுதலும், சேதமும் செய்யப்படுகின்றன. மீனவர்கள் பிடித்த மீன்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. ஆனால், அவர்களைப் பாதுகாக்கும் வகையில் இந்தியக் கடற்படை இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. எங்கேயோ இருக்கிற சோமாலியா நாட்டுக் கடற்கொள்ளையர்களிடம் இருந்து உலக நாடுகளின் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் இந்தியக் கடற்படை, இலங்கைக் கொள்ளையர்களிடம் இருந்து நமது மீனவர்களைப் பாதுகாக்கும் கடமையைச் செய்யத் தயங்குவது ஏன்? - என்றுள்ளது. (ம)

# 4 வாகனங்கள் மடக்கிப்பிடிப்பு

சாவகச்சேரி, ஏப். 4

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குள் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட மற்றும் உரிய அனுமதிப்பத்திரங்கள் இன்றி மணல் ஏற்றிச் சென்ற 4 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருப்பதுடன் அதன் சாரதிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மறவன்புலோ கோவிலாக்கண்டிப் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை வேளையில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்த உழவியந்திரத்தின் சாரதியைச் சாவகச்சேரிப் பொலிஸார் கைதுசெய்திருந்தனர். அத்துடன் கடந்த செவ்வாய்க்கிழமை உரிய அனுமதிப்பத்திரம் இன்றியும் அனுமதிப்பத்திரத்தில் மோசடி மேற்கொண்டும் மணல் கடத்தலில் ஈடுபட்ட 3 டிப்பர் வாகனங்களின் சாரதிகளையும் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஒ-27,159)



# 20 சாதனையாளருக்கு 'தந்தை செல்வா' விருது

யாழ்ப்பாணம், ஏப்.4

தந்தை செல்வாவின் 126 ஆவது ஜனனதின விழாவும் 'தந்தை செல்வா விருது' வழங்கல் நிகழ்வும் யாழ்ப்பாணம், வழக்கம்பரை அம்மன் ஆலய முன்றிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

இதன்போது ஊடகத்துறை, மருத்துவத்துறை மற்றும் சமூக சேவை உள்ளிட்ட பல துறைகளில் சாதித்த 20 பேருக்கு 'தந்தை செல்வா விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி கிளை தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் பங்கேற்று சிறப்பித்தார். (ச-125)



# வவு. மருத்துவமனையின் பணிப்பாளர் பொறுப்பேற்பு

வவுனியா, ஏப். 4

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் புதிய பணிப்பாளராக ஜி.சுகுணன் நேற்றுக் கடமையைப் பொறுப்பேற்றார். வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் பூசை வழிபாட்டில் பங்கேற்ற பின்னர் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளராக தனது கடமைகளை அவர் ஆரம்பித்தார். (ஒ-18,110)

# யாழ்.வருகிறார் அநுரகுமார

கொழும்பு, ஏப்.4

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவுள்ள தேசிய மக்கள் சக்தியின் வங்கி மற்றும் நிதித்துறை நிறுவனங்களின் மாநாட்டில் பங்கேற்பதற்காக தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் அதிபர் வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க வருகை தரவுள்ளார்.

இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு நிதி விவகாரங்களைக் கையாளும் புத்திஜீவிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை அநுரகுமார திஸாநாயக்க இந்தப் பயணத்தின்போது அரசியல் கட்சிகளுடன் எந்தவொரு சந்திப்புகளையும் நடத்தமாட்டார் என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. (ச-இ)

# புதினம் தெரியுமோ?

**இண்டைக்கும் பள்ளிக்கூட விசயமொண்டைப் பற்றித்தான் சொல்லோணும். நெருப்பில்லாமலே சோறு காய்ச்சிற அளவுக்கு வடக்கில கடும் வெக்கை. போகப் போக இன்னும் வெக்கை கூடுமெண்டும் சொல்லுப்படுகுது. இப்பிடிப்பட்ட நிலையில பள்ளிக்கூடங்களில விளையாட்டுப் போட்டியளை நடத்திக்கொண்டுதான் இருக்கினம். பள்ளிக்கூடக்காரரும் ஒண்டும் செய்யேலாது. முதலாம் தவணைக்குள்ள விளையாட்டுப் போட்டியளை வைச்சு முடிச்சே ஆகோணும். வைக்காமல் விட்டால் பிறகு ஓ.எல். எக்ஸாம், அதுக்குப் பிறகு ஏ.எல். எக்ஸாம், தமிழ்த்தினப்போட்டி, ஆங்கிலதினப்போட்டி எண்டு நேரமே இருக்காது. அதால என்னதான் வெயில் உச்சியைப் பிளந்தாலும் பரவாயில்லை, முதலாம் தவணைக்குள்ள விளையாட்டுப்போட்டியை நடத்தாமல் ஓயமாட்டம் எண்டகணக்கில எல்லாப் பள்ளிக்கூடங்களிலையும் விளையாட்டுப்போட்டியள் நடக்கத்தான் செய்யுது.**

**வெயில் காலத்தில விளையாட்டுப் போட்டியளை வைச்சால், பிள்ளையளுக்கு ஏலாம வந்திடும் எண்டு "விளையாட்டுப் போட்டியளை வைக்கவேண்டாம் எண்டு அரசாங்கம் அறிவிச்சது. அப்பிடி அறிவிச்சபிறகும் எங்கடையாக்கள் விளையாட்டுப்போட்டியளை வைச்சவை. எங்கடையாக்களின்ர இந்தக் 'கடமையுணர்ச்சியைப்' பார்த்து அரசாங்கத்துக்கே கண்ணெல்லாம் வேர்த்து 'இனி நீங்கள் போட்டியளை வைக்கலாம்' எண்டு குத்துக்கரணம் அடிச்சிது. அப்பிடி அரசாங்கம் விளையாட்டுப் போட்டியளை வைக்கலாம் எண்டு பச்சைக்கொடி காட்டேக்கதான் வெக்கை இன்னும் உக்கிரமா இருந்தது. தடை போட்டிருக்கேக்கையே போட்டியளை வைச்சவை, தடையை நீக்கின பிறகு கைகட்டிக்கொண்டு இருப்பினமோ? எல்லாப் பள்ளிக்கூடங்களிலையும் இப்ப விளையாட்டுப்போட்டியள் தான்.**

**பிள்ளையளைப்புத்தகப்பூச்சியாவைச்சிருக்காமல் அவை ஆளுமையான ஆக்களா வளர விளையாட்டுப் போட்டியளை கட்டாயம் வைக்கத்தான் வேணும். ஆனால் 'உச்சிவெயில் உடம்பைக் காய்ச்சி எடுத்து கருவாடு ஆக்கினாலும் பரவாயில்லை, நாங்கள் போட்டியை வைச்சால் மத்தியானம் ஒண்டரைக்குத்தான் வைப்பம் எண்டு பள்ளிக்கூடங்கள் ஒற்றைக்காலில நிக்கிறதுதான் ஏனெண்டு தெரியேலை. முந்தின காலங்களில நாட்டுப்பிரச்சினையால பொழுதுபடமுதல் நிகழ்ச்சியை முடிக்க வேணும் எண்டதுக்காகத்தான் ஒருமணி, ஒண்டரை மணிக்கெல்லாம் விளையாட்டுப் போட்டியளை வைச்சவை. ஆனால் இப்ப எத்தினை மணிமட்டும் போட்டியளை வைக்கலாம். அப்ப வெயில் கதகளி ஆடிக்கொண்டிருக்கிற. ஒண்டரை மணிக்குத்தான் வைப்பம் எண்டுறதில என்ன செண்டிமெண்ட் இருக்கெண்டு ஒருத்தருக்கும் விளங்கேலை. முன்னுக்கு போற செம்மறியாடு தவறிவிழுந்தால் பின்னுக்கு வாற எல்லா செம்மறியாடும் விழுமாம். அதைமாதிரி இவையளும் முந்தின காலத்தில ஒண்டரை மணிக்கு விளையாட்டுப் போட்டியளை வைச்சால் தாங்களும் அதே 'சுபமுகூர்த்த நேரத்தில' தான் வைப்பம் எண்டு நிக்கினமோ தெரியேலை. விடியக்காலமையில இல்லாட்டி வெயில் தணிஞ்ச பிறகு பின்னேரத்திலையெண்டாலும் விளையாட்டுப் போட்டியை வைச்சால் ஏதும் தெய்வக்குற்றமாகிப் போடுமோ? ஆரும் விசயம் தெரிசஞ்வை சொல்லுங்கோவன்.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின்
# காரைநகர் மூலக்கிளை மகளிர்தின நிகழ்வுகள்

**யாழ்ப்பாணம், ஏப். 4**
**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி காரைநகர் மூலக்கிளையின் மாதர் முன்னணியின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர்தின நிகழ்வுகள், கசூரினா பொதுநோக்கு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றன.**



பிரதேசசபை முன்னாள் உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரைநகர் பிரதேச மாதர் முன்னணிச் செயற்பாட்டாளருமான திருமதி பரமானந்தம் தவமணி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக காரைநகர் பிரதேச செயலர் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் வீரமங்கை ஸ்ரெலினா யோகரட்ணம் கௌரவ விருந்தினராக சட்டத்தரணி சாருஜா சிவனேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காரைநகர் பிரதேச கிராம அலுவலர்களான சி.திருமகள், தேவமனோகரி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரவணபவன், உதயவாழ்வு வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குநர் யசோதா சரவணபவன், காரைநகர் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் க.பாலச்சந்திரன், முன்னாள் காரைநகர் பிரதேசசபை உப தவிசாளர் விஜயராசா மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முன்னாள் மகளிர் அணி செயலாளர் விமலேஸ்வரி சிறிகாந்தரூபன் ஆகியோரும் நிகழ்வில் பிரசன்னமாகியிருந்தனர். (ம-125)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 4
கொக்குவில் மேற்கு வாராஹி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை திருமஞ்சத் திருவிழாவும் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ச)

## மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 4
கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி, பாடசாலை முன்றலில் அதிபர் ஜெ.றஜீவன் தலைமையில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.வலயக் கல்வி அலுவலகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சுவீதன் பிரதம விருந்தினராகவும், தீவக லயன்ஸ் கழகத் தலைவர் கலாநிதி சோ.பாலகுமார் மற்றும் யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் செயலாளர் லயன். ரொனி கஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-66)



## 'செயற்பட்டு மகிழ்வோம்'

யாழ்ப்பாணம், ஏப். 4
காங்கேசன்துறை, ஊறணி கனிஷ்ட வித்தியாலயத்தின் 'செயற்பட்டு மகிழ்வோம விளையாட்டு விழா, பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் அதிபர் பா.செந்தூரன் தலைமையில் இன்று வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறும்.

நிகழ்வில் வலிகாமம் வலய முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கனகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ப-66)

## மூன்று மூத்த மகளிருக்கு 'பச்சிலைப்பெண்' விருது

யாழ்ப்பாணம், ஏப்.4
பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக பன்னாட்டு மகளிர்தின நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த 3 மூத்த மகளிருக்கு 'பச்சிலைப் பெண்' விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

பிரதேச செயலர் த.ஜெயசீலன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த மாதம் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக பளை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் ஏ.கே.ஹெபாவ மெபன்டா, சிறப்பு விருந்தினராகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை செயலாளர் திருமதி தர்சினி தயானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-9)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஏப். 4
அளவெட்டி சைவ வாலிப சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் நாளை மறுதினம் சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அளவெட்டி 'திருவடிநிழல்' மடாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பிரேரணைகளைச் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு முன்னர் எழுத்துமூலமாக தலைவர் அல்லது செயலாளரிடம் வழங்கலாம். (ச)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பிணக்குகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவு விடயத்தில் கவனம் தேவை. நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியே ஏற்படும். காரியம் அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் பணியாளர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மறைமுகத் தொல்லைகள் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும். பாதிப்பு எதுவும் இருக்காது. ஒருமுறைக்குப் பல முறை யோசித்து எடுப்பது நல்லது.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். வீண் செலவுகள் ஏற்படும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். நல்ல திருப்பம் ஏற்படும். எச்சரிக்கையாக இருக்கவும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். பேச்சு சாதகமாக முடியும். எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். முருகப்பெருமானை வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும். உடல் அசதி ஏற்படக்கூடும்.

**கன்னி:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உற்சாகமாக இருப்பீர்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். பிடிவாதப் போக்கு மன அமைதியை பாதிக்க வாய்ப்புண்டு. அனுசரித்துச் செல்வது நல்லது. காரியம் அனுகூலமாக முடியும்.


**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சு சாதகமாகும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். பொருள் சேர்க்கை உண்டு. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாகும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உடல்நலம் பாதிக்கப்படலாம். கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும். கையிருப்புக் குறையும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பொறுமை அவசியம்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தொல்லைகள் நீங்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வெள்ளையடிப்புக்கான திசைதிருப்பல்

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில் ஈஸ்டர் விவகாரம் மீண்டும் பேசுபொருளாக்கப்பட்டிருக்கின்றது. 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஈஸ்டர்க்குண்டுத் தாக்குதலுக்கு நீதி இன்னமும் கிடைக்கவில்லை. ஆனால் அரசியலுக்குத் தீனி போடும் விடயமாக அது மாற்றப்பட்டுள்ளது. இதில் ஆகப்பிந்திய விடயமாக, தாக்குதல் நடக்கும்போது நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன கிளப்பிவிட்ட புரளி அமைந்திருக்கின்றது.

'ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி யார் என்று எனக்குத் தெரியும். உரிய பாதுகாப்பு வழங்கினால் நீதிமன்றுக்குச் சொல்வேன்' என்று பகிரங்கக் கூட்டத்தில் தெரிவித்தார். அதையடுத்து அவருக்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டமையால் அங்கு சென்று வாக்குமூலம் வழங்கினார். அவர் தனது வாக்குமூலத்தில், இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளமையால் இந்தியாவே இந்தக் குண்டு வெடிப்பின் பின்னணியில் இருந்தது என்று தெரிவித்துள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. எனினும் அவரது வாக்குமூலம் தொடர்பான உத்தியோக பூர்வ தகவல்கள் எவையும் இதுவரை வெளிவரவில்லை.

ஈஸ்டர் தாக்குதலால் அரசியல் ரீதியாக நன்மை அடைந்தவர்கள் ராஜபக்சக்களே. கோத்தாபய ராஜபக்சவை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக, இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) உதவியாளராக இருந்த ஹன்ஸீர் ஆசாத் மௌலானா, சனல் - 4 ஊடகத்தின் ஆவணப் படத்தின் ஊடாகத் தெரிவித்திருந்தார்.

'இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், இலங்கை புலனாய்வுப் பிரிவின் தலைவர் சுரேஷ் சாலே ஆகியோரே ஈஸ்டர் தாக்குதலை பின்னணியில் இருந்து நடத்தினர்' என அவர் அந்த ஆவணப் படத்தில் குறிப்பிட்டிருந்தார். மக்களிடத்திலும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சந்தேகம் ராஜபக்சக்களின் பக்கமே இருக்கின்றது.

அவை எல்லாவற்றையும் இல்லாதொழிக்கவும், அதாவது ராஜபக்சக்களுக்கு வெள்ளையடிக்கவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்சக்களின் ஆசீர்வாதத்துடன் களமிறங்குபவரை வெல்ல வைப்பதற்காகவும் மைத்திரிபால சிறிசேனா, ஈஸ்டர் தாக்குதல் விவகாரத்தை இந்தியாவை நோக்கி திசை திருப்ப முயல்கின்றாரா என்ற சந்தேகம் இயல்பானது. சிங்களவர்கள் மத்தியில் இயல்பாகவே இந்தியாவுக்கு எதிரான மனநிலை உண்டு. எனவே ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி இந்தியா என்ற விடயத்தை இலகுவாகக் கொண்டு சேர்க்கலாம் என்ற எண்ணத்தில் மைத்திரி இதைச் சொல்லியிருக்கலாம்.

ஆனால் மண்டையில் இருக்கும் கொண்டையை மறந்த நகைச்சுவை நடிகர் வடிவேலுவைப்போல, ஒரு விடயத்தை மைத்திரி மறந்துவிட்டார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நேரத்துடன் - முற்கூட்டியே எச்சரிக்கைத் தகவலை வழங்கிய நாடு இந்தியா. அந்த நாட்டின் உளவுத்துறை மூன்று தடவைகள் இது தொடர்பான எச்சரிக்கையை இலங்கையுடன் பகிர்ந்திருந்தது. அதைக் கண்டும் காணாமலும் கிடப்பில் போட்டிருந்தவர் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிதான்.

அதேபோல இந்த நாட்டில் போர் முடிந்ததிலிருந்து சீனாவுக்கு செங்கம்பளம் விரித்து வரவேற்றவர்களும் ராஜபக்சக்கள்தான். அப்படியிருக்கையில் இந்தக் குண்டுத்தாக்குதலால் அரசியல் லாபத்தை அவர்கள்தான் அனுபவிப்பார்கள் என்று தெரிந்திருந்தும் இதைச் செய்வதற்கு இந்தியா ஒன்றும் அரசியல் இராஜதந்திர அரிச்சுவடி தெரியாத முட்டாள் நாடல்ல.

எனவே மைத்திரிபால சிறிசேனவின் இந்தியாவின் மீதான குற்றச்சாட்டு என்பது, ராஜபக்சக்களுக்கு வெள்ளையடிப்பதற்கான முயற்சிதான்.




China Renames 30 Places In Arunachal Pradesh -News



# அநுர - சஜித் நேரடி விவாதம்



கொழும்பு, ஏப். 4

**அநுரகுமார திஸாநாயக்கவுடன் நேரடி விவாதத்துக்கு வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.) விடுத்த சவாலை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்றுக்கொண்டுள்ளது.**

பொருளாதார வேலைத்திட்டம் தொடர்பில் தமது கட்சியின் பொருளாதார பேரவை உறுப்பினர்களுடன் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார பேரவையின் விவாதத்துக்கு வர வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பகிரங்கமாக சவால் விடுத்திருந்தது. சுமார் 7 தடவைகள் இவ்வாறு சவால் விடுக்கப்பட்டிருந்தது.

இந்த சவால் தொடர்பில் கருத்து வெளியிட்ட தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார பேரவை உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி, 'குறித்த சவாலை நாம் ஏற்கின்றோம். கொள்கைகள் பற்றி விவாதிப்பது நல்லது. ஆனால் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, குறித்த விவாதம் சிறப்பாக அமைய வேண்டுமெனில் அங்கும் இங்கும் கூவித்திரியாமல் எமக்கு அதிகாரபூர்வமாக தெளிவுபடுத்தவும். எமக்கு அழைப்பு விடுப்பவர்கள் இன்று ஒரு கட்சியிலும் நாளை வேறொரு கட்சியிலும் இருக்ககூடும். எனவே, தலைவர்களுக்கிடையிலான விவாதம்தான் சிறந்தது. அது சஜித்தால் முடியுமா?' என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே, ஹந்துனெத்தியின் சவாலை எதிர்கொண்டு அநுரவுடன் விவாதிப்பதற்கு சஜித் சம்மதம் தெரிவித்துள்ளார். (ம-44-6)

## தபால் சேவை ஸ்தம்பிதம்

கொழும்பு, ஏப். 4

தபால் விநியோக ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் கடிதங்களை விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால் விநியோக ஊழியர்கள் உள்ளிட்ட சுமார் 2 ஆயிரம் ஊழியர்களுக்கு வெற்றிடம் காணப்படுகிறது.

பெரும்பாலான அதிகாரிகள் ஓய்வு பெற்றுள்ளமை மற்றும் புதிய அதிகாரிகள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படாமை ஆகிய காரணங்களால் தபால் சேவை ஸ்தம்பித்துள்ளது என்றும் தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ச–இ)

## அராலியில் வீடொன்று தீயில் எரிந்து நாசம்!

யாழ்ப்பாணம், ஏப். 4

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி கிழக்குப் பகுதியில், வீடு ஒன்று தீயில் எரிந்து முழுமையாகச் சேதமடைந்துள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை எனவும் உயிர்ச் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என்றும் வட்டுக்கோட்டைப்பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ப-27)

## தனியார் பேருந்தை மறித்துத் தாக்குதல்

வவுனியா, ஏப். 4

வவுனியாவில் தனியார் பேருந்தை வழிமறித்து மற்றொரு தனியார் பேருந்தின் சாரதி, நடத்துநர் ஆகியோர் தாக்குதல் நடத்த முயன்றுள்ளனர். சூடுவெந்தபுலவில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நேர அட்டவணைப்பிரச்சினை காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் நிலையில் இது தொடர்பில் முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. (ஒ-18)

## வெற்றிலை விலையுயர்வு

சந்தையில் வெற்றிலையின் விலை அதிகரித்துள்ளது என்று சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வறண்டகாலநிலை மற்றும் அறுவடை வீழ்ச்சியால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்வருகின்ற சிங்களப் புத்தாண்டு காலத்தில் வெற்றிலை விற்பனை அதிகரிக்கும் என்றும் இதனால் வெற்றிலைக்கு மேலும் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் வெற்றிலை விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

## நாளை

05.04.2024
**வெள்ளிக்கிழமை**
**பங்குனி 23**
சுபநேரம் : 06.08 - 07.38
இராகுகாலம் : 10.38 - 12.08

## நாளொரு நல்வார்த்தை

**அஞ்சி நடுங்கிக் கொண்டிருப்பவனால் சிறிய குட்டையைக் கூடக் கடக்க முடியாது.**


– சாணக்கியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தென்மராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தமர்வு வலயக் கல்வி பணியக மண்டபத்தில் கடந்த வாரம் நடைபெற்றது. நிகழ்வில் சாவகச்சேரி நகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சூ.குணசாந்தன் சிறார்களின் வாய்ச் சுகாதாரம் மற்றும் முன்பள்ளி ஒன்றில் இருக்கவேண்டிய அடிப்படை சுகாதார அம்சங்கள் தொடர்பில் விளக்கமளித்தார். (எ-9)

கடற்கரையைச் சுத்தப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேசசபை உத்தியோகத்தர்களால் கண்ணகை அம்மன் இறங்குதுறை மற்றும் ஊர்காவற்றுறை இறங்குதுறை ஆகிய பகுதிகளில் காணப்பட்ட பிளாஸ்ரிக் பொருள்கள் அண்மையில் அகற்றப்பட்டன. (எ-9)





சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையினரின் ஏற்பாட்டில், ஞானச்சுடர் சஞ்சிகையின் பங்குனி மாத 315 ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர் வ.கணேசமூர்த்தி வெளியீட்டுரையையும், சைவப்புலவர்.நித்தியபாபுதரன் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தினர். (எ-66)

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.
பாடசாலை அதிபர் கு.திலீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளரும், பழைய மாணவருமான மருத்துவ கலாநிதி சி.யமுனாநந்தா, சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் இ.குவேந்திரநாதன், கௌரவ விருந்தினராக பழைய மாணவர் தி.வேலும் மயிலும் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-66)







சிறுதொழில் முயற்சியாளர் களை ஊக்குவிக்கும் முகமாக மாதாந்த சந்தை நிகழ்வு நல்லூர் பிரதேச செயலக வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (எ-66)

மாந்தை கிழக்கு, அம்பாள்புரம் கிராமத்தில், தாயக அரசியல் நடுவப் பணியகத்தின் நிதியனுசரணையுடனும் அம்பாள்புர முத்தமிழன் விளையாட்டுக் கழக ஒத்துழைப்புடனும் மற்றும் மாவட்ட விளையாட்டுத் துறையின் ஆதரவுடனும் மாவட்ட மட்டக் கபடிப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை அம்பாள்புரம் முத்தமிழன் விளையாட்டுக் கழகமும் 2 ஆம் இடத்தை கொல்லவிளாங்குளம் உதயதாரகை விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன. பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை அம்பாள்புரம் முத்தமிழன் விளையாட்டுக் கழகத்தினரும் 2 ஆம் இடத்தைப் பாலிநகர் பாடசாலை அணியினரும் பெற்றுக் கொண்டனர். வெற்றி பெற்ற கழகத்தினருக்குப் பணப் பரிசும் வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன. (ப-13)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினாதீவு பெருங்குளம் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத் தேர்த் திருவிழா கடந்த புதன்கிழமை நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (எ-66)




இலங்கை வங்கி கொடிகாமம் கிளையின் பாடசாலை சேமிப்புக் கழகத் திறப்பு விழா, திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. கல்லூரி அதிபர் சி.பாலசந்திரனின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக வட மாகாண இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் வ.சிவானந்தன், யாழ். கிழக்குப் பிராந்திய பிரதேச முகாமையாளர் திருமதி உ.யோகராஜசிங்கம், இலங்கை வங்கி கொடிகாமம் கிளை முகாமையாளர் ந.குணபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-159)




வட மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் மற்றும் தென்மராட்சிப் பிரதேச கலைஞர்கள் இணைந்து கொண்ட கலைஞர் சங்கமம், நல்லூர்ப் பிரதேச செயலகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், அண்மையில் காலமான கலைஞர் திருமதி கோகிலமணி ஜெகானந்தராஜாவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு அன்னாரின் நினைவுகளைத் தாங்கிய "கோகிலம்" என்ற நூலும் வெளியிடப்பட்டது. (ப-159)



மன்னார் கரப்பந்தாட்ட பிறீமியர் லீக்கினால் கடந்த சில மாதங்களாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளுக்கும், இதுவரை நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டிகளில் சிறந்து விளங்கிய வீரர்களுக்கும் பரிசளிக்கும் நிகழ்வு, துள்ளுக்குடியிருப்பு கரப்பந்தாட்ட மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (எ-60)

தேசிய மாணவர் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து பிரதி சபாநாயகர் மற்றும் பிரதி அமைச்சர் பதவிகளுக்கு இரு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கொழும்பில் நடைபெற்று முடிந்த தேசிய மாணவர் நாடாளுமன்றத் தேர்தலில் வவுனியா கல்மடு மகா வித்தியாலய மாணவன் நாகராசா திலக்சன் பிரதி சபாநாயகராகவும், வடமராட்சி வலயம் யாழ். ஹாட்லிக் கல்லூரி மாணவன் மோகன் அர்ஜுன் பிரதி அமைச்சராகவும் தெரிவாகியுள்ளனர். (எ-27)





அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி, கல்லூரி அதிபர் கு.பாலமுருகன் தலைமையில், பாடசாலையின் மைதானத்தில், கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி விளையாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார சிரேஷ்ட உதவிச் செயலாளர் ந.திருலிங்கநாதனும், சிறப்பு விருந்தினராக கலாநிதி ஈ.எஸ்.பி.நாகரட்ணமும், கௌரவ விருந்தினராக பா.பாலச்சந்திரனும் கலந்துகொண்டனர். (எ-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரணி அம்பாள் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 4

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மஞ்சத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன என்று தேவஸ்தான தர்மகர்த்தா சபையினர் தெரிவித்தனர். (ச)

# கலைவிழா

வவுனியா, ஏப். 4

வவுனியா மாவட்டக் கலாசார அதிகார சபை முன்னெடுத்த, சித்திரைக் கலைவிழா, வவுனியா நகரசபை மைதானத்தில் இன்று வியாழக்கிழமை தொடக்கம் நாளை வெள்ளிக்கிழமை இரவு 10 மணி வரை நடைபெறவுள்ளது.


இதன்போது மாவட்ட கலாமன்றங்களின் கண்காட்சிக் கூடங்கள், மாணவர்களின் சித்திரக் கண்காட்சி, இராட்சத சட்டைக் கண்காட்சி, வர்த்தக விற்பனை மற்றும் கண்காட்சி நிலையங்கள், உள்ளூர் உற்பத்தியாளர்களின் காட்சிப்படுத்தல்கள், இராணுவம் மற்றும் பொலிஸ் பிரிவுகளின் சாகச நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. (ப-110)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஏப். 4

கொய்யாத்தோட்டம் நற்பணி மன்றத்தின் 4ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட குருதிக்கொடை முகாம் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிதொடக்கம் பிற்பகல் 2 மணி வரைகொய்யாத்தோட்டம்கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. (ச)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 13.04.1933 மறைவு 01.04.2024

எமது பாடசாலை ஆசிரியை திருமதி
உமா விஸ்ணுதாசன்
அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர்
**முத்தையா விவேகானந்தன்**
தோற்றமும் மறைவும் இயற்கை
வகுத்த நியதி என்றாலும்
இன்பமும் துன்பமும்
வாழ்வின் மேடையில்
எப்போதும் நடப்பதென்றாலும்
தங்கள் பிரிவை நினைந்து
கலங்கித் தவிக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

(CR/42142) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 06 . 1977 — மறைவு 03 . 04 . 2024

### கந்தையா விஜயகுமார் (விஜி)

நயினாதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 5ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா விஜயகுமார் அவர்கள் நேற்று (03.04.2024) புதன்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சரோஜினிதேவி தம்பதியரின் அன்பு மகனும், கேதீஸ்வரன் (ஓய்வு நிலை தபால் அதிபர்), பரமேஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் புவனேஸ்வரி, பரிமளாதேவி (நோர்வே), சுதாகரன் (ஜேர்மனி), நாகேஸ்வரி, காலஞ்சென்ற யசோதரன் மற்றும் வியேந்திரன் (சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளர், வேலணை), தர்சினி (பிரான்ஸ்), தனுஷியா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவகஜனி, ரஞ்சிதாதேவி (ஜேர்மனி), யோகரெத்தினம், ஸ்ரீதரன் (நோர்வே), ராஜினி (ஜேர்மனி), காலஞ்சென்ற கேதீஸ்வரன் மற்றும் கேதாரகௌரி, சுதர்சன் (பிரான்ஸ்), தயாளன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2024) வியாழக்கிழமை பி.ப 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**5ம் வட்டாரம்,**
**நயினாதீவு.**
**077 320 3138, 077 255 1146**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 0086) S-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 01 . 1943 — மறைவு 02 . 04 . 2024

### இராசையா மங்களாதேவி

யாழ்ப்பாணம் நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் யாழ். ஆனைப்பந்தி மற்றும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா மங்களாதேவி நேற்று முன்தினம் (02.04.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசையா அவர்களின் அன்பு மனைவியும், சதாரூபினி (பிரான்ஸ்), சற்சொரூபின், சத்தியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், கருணாகரன் (பிரான்ஸ்), பவநாதன் (நாதன் புடைவையகம்), சுதேஸ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான யோகம்மா, நடேசபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனுசிகா,சாருகா, ஜீவிகா, சஜீகரன், தருணிகா, அரணிகா, கஜீபவன், பிரவீன், அஸ்வீன், ஓவியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2024) வியாழக்கிழமை 11.00 மணியளவில் அன்னாரது மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

S. பவநாதன்
**கருவப்புலம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

தகவல்:
**மருமகன்**
**(நாதன் புடைவையகம் - திருநெல்வேலி)**
**077 415 1947**

(CS/54821) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 02 . 1951 — மறைவு 03 . 04 . 2024

### தம்பிமுத்து குகதாசன்

**(ஓய்வுநிலை தபால் அதிபர்)**

அச்சுவேலி மடத்தடியைப் பிறப்பிடமாகவும், தொல்புரம் மேற்கு சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து குகதாசன் (ஓய்வுநிலை தபால் அதிபர்) நேற்று (03.04.2024 ) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், விஜிதா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கணேசன் மற்றும் மகேஸ்வரி (கனடா), துரைராஜா (கனடா), யோகநாதன் (அச்சுவேலி), நவரத்தினராஜா (பிரான்ஸ்), ஜெயபவானி (லண்டன்) ஆகியோரின் பாசமிகுசகோதரனும், குகப்பிரசாத் (கனடா), குகப்பிரியா (கனடா), காலஞ்சென்ற பிரியந்தி ஆகியோரின் அன்புத்தந்தையாரும், ஜனித்தா (கனடா), சுரேஸ்குமார் (கனடா), ஆகியோரின் பாசமிகுமாமனாரும், விதுஷி, விதுண், ஜனுஷ் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2024) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

0776144433 (மனைவி), 0764629228 (மகன்)
0740563790 (மகள்), 0740561550 (நவம்)
0777144204 (யோகநாதன்)

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS/42141) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தென்மராட்சி பிரதேச கிராம மட்ட சமுர்த்தி அமைப்புகளிருந்து, பிரதேச மட்ட அமைப்புக்கான நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. திருமதி உ. அருஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் க . விக்னேஸ்வரன், முகாமைத்துவப் பணிப்பாளர், கருத்திட்ட முகாமையாளர்கள், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,கிராமமட்ட சமுர்த்தி அமைப்புகளின் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-9)



குப்பிழான் வடபத்திரகாளி அம்பாள் ஆலய கும்பாபிஷேக தின சிறப்பு வழிபாடு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (எ-66)



கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தின் ஏற்பாட்டில், மாவீரரின் துணைவியார் உள்ளிட்ட இருவருக்கு வாழ்வாதார உதவி மற்றும் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், உலருணவுப் பொதிகள் என்பன புலம்பெயர்வாழ் ஈழத்தமிழரான விஸ்வா ரமேஸின் நிதிப்பங்களிப்பில் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன. (ப-100)



உலக பூச்சிய கழிவு தினத்தை முன்னிட்டுப் பாடசாலை மாணவர்களிடையே கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, காரைநகர் பிரதேசசபையால் மெய்கண்டான் வித்தியாசாலை மற்றும் வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளில் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டன. (ப-66)

இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா நள்ளிரவுத் திருப்பலி (ஈஸ்டர்) மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் கடந்த சனிக்கிழமை இரவு 11.15 மணிக்கு இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்லியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. (எ-56)







ஜெயபுரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் பல்லவராயன்கட்டு 6 ஆம் வாய்க்கால் பகுதியில் நாற்று நடுகை மற்றும் வயல்விழா என்பன கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன. பிரதேச விவசாயப் போதனாசிரியரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளி. மேற்கு உதவி விவசாயப் பணிப்பாளர் சோ.விஜயன், கிராம சேவையாளர் கு.கணேசமூர்த்தி, காலநிலைக்குச் சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் முழங்காவில் கமநல சேவை பிரிவுக்கான பிரதிநிதி செ.பிரதீபன், அயல் பிரதேசப் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்து மாணவன் கொலை: ஜூலைக்கு வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ்ப்பாணம், உடுவிலில் நள்ளிரவு வேளை வீட்டுக்குள் புகுந்தவர்களால் 20 வயது இளைஞர் கொடூரமாக வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு கடந்தவாரம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இரு தினங்கள் நடைபெற்ற வழக்கு விசாரணைகளில், உயிரிழந்த இளைஞரின் தந்தை மற்றும் தாய் ஆகியோர் சாட்சியம் வழங்கினர். அவர்களின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர் வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

2013ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் நடந்திருந்தது. வீட்டுக்குள் புகுந்தவர்கள் கோடரியால் தாக்கி, வெட்டியதில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவனான ச.ஜதுசன் (வயது-20) மற்றும் தந்தை, தாய் ஆகியோர் படுகாயமடைந்தனர். அவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், ஜதுசன் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை முன்னெடுத்த பொலிஸார் இரு சந்தேக நபர்களைக் கைது செய்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கே கடந்தவாரம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறீகாந்தா முதலாம் எதிரி சார்பிலும், சட்டத்தரணி க.சுகாஷ் இரண்டாம் எதிரி சார்பிலும் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். (எ-26)

## வற்வரியில் திருத்தம்; சட்டமாக நிறைவேற்றம்


15 வீதமாகவுள்ள வற்வரியை 18 வீதமாக அதிகரிக்கும் பெறுமதி சேர் வரி சட்ட வரைவு 36 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழான கட்டளையை நிறைவேற்ற எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பைக் கோரினார். அதற்கமைய இடம்பெற்ற இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பில் பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழான கட்டளைக்கு ஆதரவாக 55 வாக்குகளும் எதிராக 19 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையிலேயே 36 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. 149 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 02 . 06 . 1944

மறைவு 03 . 04 . 2024



அமரர் மாதர் மகாலிங்கம்


அப்பாவிடம் கற்றுக்கொண்ட ஒரு பாடம்
ஆயிரம் கஸ்ரங்கள் வந்தாலும்
எதையும் எதிர்கொள்ளும் அவரின்
சிரித்த முகம்......

இல.85, பழம் றோட்,
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

எட்மன் சுகந்தினி
குடும்பம்

CS/ 2024/00118) A-1

## மரண அறிவித்தல்



அமரர் அம்பலவாணர் இரங்கநாதன்

(ஓய்வு பெற்ற அதிபர்/ பெரியதம்பனை மகா வித்தியாலயம்)

செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் இரங்கநாதன் அவர்கள் 03.04.2024 அன்று அகால மரணம் அடைந்துவிட்டார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 04.04.2024 அன்று நண்பகல் 12.00 மணியளவில் செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று சம்பில்துறை இந்து மயானத்ததில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டி குறிச்சி
பண்டத்தரிப்பு


தகவல்:
குடும்பத்தினர்
தொ.பே: 021 225 1776

(CS 0017) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 09 . 1958

மறைவு 03 . 04 . 2024



அமரர் பொன்னுத்துரை முருகையா

கைதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவில் வித்துவான் பொன்னுத்துரை முருகையா அவர்கள் 03.04.2024 புதன்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னாரின் பூதவுடல் 04.04.2024 வியாழக்கிழமை அன்று அவரது இல்லத்தில் இருந்து பகல் 2.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு கைதடி ஊற்றல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகிறோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 969 6444

(CS 00121) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 06 . 1980

மறைவு 01 . 04 . 2024



செல்வி நடேசலிங்கம் கமலசிறி

மீசாலை வடக்கு, மீசாலையை பிறப்பிடமாகக் கொண்ட செல்வி நடேசலிங்கம் கமலசிறி அவர்கள் கடந்த 01.04.2024 திங்கட்கிழமை இரவு இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் நடேசலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், நகுலன், கோமகள், குலேபா, கோகிலரூபி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவவத்சலா, சிவனேசன், ஜெயக்குமார், துஸ்யந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2024) அன்று கொழும்பில் இடம்பெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி.ந.சரஸ்வதி
077 171 7216
திரு.செ.நாகேந்திரன்
077 224 9523

(CR 42144) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையை...

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக இலங்கை வந்தடைந்த அவர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டு சுமார் ஆறு மணிநேரத்துக்கும் மேலாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 7 பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அவர்கள் 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழக உயர்நீதிமன்றத்தின் தற்றுணிவின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

நீதிமன்றத்தால் அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தாலும் இலங்கையைச் சேர்ந்த சாந்தன், முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் தொடர்ந்தும் தமிழகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சாந்தன் கடந்த சிலவாரங்களுக்கு முன்னர் உயிரிழந்தார். அதையடுத்து ஏனைய மூவரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று இந்திய அரசுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. இந்த நிலையில் இவர்கள் மூவரும் நேற்று இலங்கைக்கு விமானம் மூலம் அனுப்பப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10 மணிக்கு சென்னை விமான நிலையத்துக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். நேற்று புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு சென்னையில் இருந்து புறப்பட்ட விமானம் நண்பகல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அடைந்தது.

அவர்கள் மூவரும் விமான நிலைய குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளும் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்கு படகு மூலம் புறப்பட்டுச் சென்ற விடயம் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டிருந்தது. சுமார் ஆறு மணித்தியாலத்துக்கும் மேலான விசாரணைகளின் பின்னர் அவர்கள் விமான நிலையத்தை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டனர். (அ-எ-26-100)

## யாழ். விமான...

யாழப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை தனியாருக்கு குத்தகைக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்ற தகவலை துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று கூறுகின்றது. ஆனால் அந்த அதிகாரி யாழ்ப்பாணம் சர்வதேச விமானத்தளம் உள்நாட்டில் உள்ள தனியார் நிறுவனத்துக்கா அல்லது வெளிநாட்டைச் சேர்ந்த தனியார் நிறுவனத்துக்கா குத்தகைக்கு வழங்கப்படும் என்ற தகவலை வழங்க மறுத்துவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையத்தின் செயற்பாடுகளை இந்திய மற்றும் ரஷ்ய நிறுவனங்களுக்கு மாற்றுவதற்கான யோசனை நிதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில், தற்போது யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை தனியாருக்கு குத்தகைக்கு விடுவது தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய நிதியுதவியில் பலாலி விமானத்தளம் திருத்தியமைக்கப்பட்டு 2019ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டது. ஆயினும் இந்த விமானத்தளம் ஊடாகத் தற்போது இந்தியாவுக்கான விமானப் போக்குவரத்து மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (அ-எ-இ)

## மயங்கி...

நேற்று அதிகாலை 4 மணியளவில் இயற்கை உபாதைக்காக வெளியே சென்றவர் மயங்கி வீழ்ந்துள்ளார். அதையடுத்து உறவினர்கள் அம்புலன்ஸுக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

அம்புலன்ஸில் வந்த மருத்துவ உதவியாளர்கள் பரிசோதித்ததில், இளைஞர் உயிரிழந்திருந்தமை கண்டறியப்பட்டது. இந்தத் தகவலை அறிந்த இளைஞரின் தாய், தனது மருத்துவத் தேவைக்காக வைத்திருந்த மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்டு உயிரை மாய்க்க முயற்சித்துள்ளார். அதையடுத்து அவர், வந்திருந்த அம்புலன்ஸில் ஏற்றப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இளைஞனின் உயிரிழப்புக்கு நாட்பட்ட புற்றுநோயே காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் கூறப்பட்டுள்ளது. (அ-எ-26)

## துயிலும்...

அந்த வளைவை அகற்றவேண்டும் என்றே தற்போது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வளைவு ஆபத்தானது என்று தெரிவித்து அதை அகற்ற உத்தரவிடக்கோரி முழங்காவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நீதிமன்றத்தை நாடியுள்ளார். அது தொடர்பில் இன்று வியாழக்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பூநகரி பிரதேசசெயலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் இன்றி அமைக்கப்பட்டுள்ள இந்த வளைவை அகற்றுவதற்குப் பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் தொடர்பில் அந்தப் பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். அந்த வளைவு தொடர்பில் பொதுமக்கள் எந்தவித ஆட்சேபனைகளும் தெரிவிக்காத நிலையில், பொலிஸாரின் நடவடிக்கை ஏற்றுக்கொள்ளமுடியாதது என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, மணல் அகழ்வுக்காக சொந்தமாகக் கனரக வாகனங்களை வைத்துள்ளனர் என்று பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பகிரங்கமாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்ததையும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-இ)

## மாணவருக்கு...

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விஷாந்த தலைமையிலான யாழ்.மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 5 பேர் குருநகரைச் சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் நாவாந்துறையைச் சேர்ந்தவர் எனவும், 18, 19, 20, 21 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று சென்.பற்றிக்ஸ் பாடசாலைக்கு அருகில் இருவர் போதை மாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் ஏனையோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் முச்சக்கரவண்டியில் போதைமாத்திரை வியாபாரம் செய்த நிலையில், பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் விரட்டிச் சென்று பிடிக்கப்பட்டார்.

சந்தேகநபர்களிடம் இருந்து 300 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் யாழ்ப்பாண மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-26)

## இனப்படுகொலை...

பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று வவுனியாவில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதன்பின்னர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு கோரிக்கை முன்வைத்தனர்.

பாரதிய ஜனதாக் கட்சி தன்னை இந்து மதத்தின் பாதுகாவலராகச் சித்திரிக்கின்றது. தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையிடம் கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றோம்.

சிங்கள - பௌத்தர்களால் குருந்தூர் மலை, வெடுக்குநாறி, கிண்ணியா வெந்நீர் ஊற்று என அண்மைக்காலமாக இடம்பெற்ற ஆக்கிரமிப்புகள் தொடர்பில் நாம் அச்சமடைந்துள்ளோம். இவ் விடயத்தில் ஏன் மௌனம் காக்கிறீர்கள்? தமிழ் இந்துக் கோவில்களைவிட்டு விலகவேண்டும் என்று அழுத்தம் கொடுக்கவேண்டும். இந்துக் கோவில்களின் நீண்டகாலப் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-எ-110)

## இரு...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்வரை பொதுத் தேர்தலை நடத்தாதிருக்கும் திட்டத்திலேயே ஜனாதிபதி உள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சிக்கு ஏற்படும் பின்னடைவைத் தவிர்த்துக்கொள்வதற்காக ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத்தேர்தலை நடத்துவதற்கு பஸில் ராஜபக்ச முயற்சித்துவருகின்றார். ஜனாதிபதிக்கும் அழுத்தம் கொடுத்து வருகின்றார்.

இரு தரப்புக்கும் சிக்கல் இல்லாதவகையில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல்களை ஒரேநாளில் நடத்துவது தொடர்பில் அரசுக்குள் தீவிரமாகப் பேச்சு நடத்தப்பட்டுவருகின்றது. மிகவும் நம்பகரமான வட்டாரங்களில் இருந்து இந்தத் தகவல் கிடைத்தது.

இரு தேர்தல்களையும் ஒரேநாளில் நடத்துவதற்கு சட்டரீதியாக எவ்விதத் தடையும் இல்லை. ஜனாதிபதித் தேர்தலுக்குரிய வேட்புமனு தாக்கல் திகதியை தேர்தல் ஆணைக்குழு அறிவிக்கும் நாளிலேயே ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தால் இரு தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்தமுடியும்.

இவ்விரு தேர்தல்களையும் ஒரேநாளில் நடத்துவதால் ஜனாதிபதியைப் போலவே மொட்டுக் கட்சிக்கும் சாதகமாக அமையும். ஜனாதிபதி மற்றும் மொட்டுக் கட்சியினருக்கு எது சாதகம் என்பதைவிட நாட்டுக்கு எது நல்லது என்பது பற்றியே நாம் பார்க்கவேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை பலம் கிடைக்கும் என்று தெரியவில்லை. அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் சட்டமூலங்களை நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்படும். ஜனாதிபதியால் தனது பதவிகாலத்தில் இரண்டரை வருடங்கள் செல்லும்வரை நாடாளுமன்றத்தையும் கலைக்கமுடியாது. இதனால் நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற தன்மை உருவாகலாம். ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடத்தப்பட்டு, அதன்பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால் நெருக்கடி நிலை ஏற்படாது - என்றார்.

(அ-எ-44)

## 9 வயதுச்...

கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி மாலை அருகில் உள்ள வீடொன்றுக்குச் சென்ற சிறுமி வீடு திரும்பவில்லை. சிறுமியை அக்கம்பக்கத்தில் தேடியும் சிறுமி கிடைக்காததால் இது தொடர்பாக தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அந்தப் பகுதியில் இருந்த பாதுகாப்புக் கமராப் பதிவுகளின் அடிப்படையில் பொலிஸாரால் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் அருகில் உள்ள தென்னந்தோட்டத்தில் வேலை செய்பவர் என்று அடையாளம் காணப்பட்டார். 55 வயதான அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சிறுமியின் சடலம் தென்னம்தோட்டம் ஒன்றில் இருந்து மீட்கப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்டவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். சந்தேகநபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் போன்று செயற்பட்டதால், கடந்த வியாழக்கிழமை வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அங்கிருந்து அவர் நேற்றுக்காலை தப்பியோடியுள்ளார்.

சந்தேகநபரைக் கைது செய்வதற்குரிய நடவடிக்கைகளை சிறைச்சாலை உத்தியோகத்தர்களும், பொலிஸாரும் முன்னெடுத்துள்ளனர். (அ-எ-110-18)

## ஒரேநாளில்...

நடத்தப்படும். இவ்விரு தேர்தல்களையும் முடிந்தால் ஒரேநாளில் நடத்த வேண்டும் என்று சபாநாயகர் கோரிக்கை விடுத்திருந்தார். பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் இரு தேர்தல்களும் ஒரேநாளில் நடத்தப்பட்டால் அதன்மூலம் மக்களுக்கு நிவாரணம் கிட்டும்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் என்பன ஒரேநாளில் நடத்தப்பட்டால் அது நல்லது. அதன்மூலம் செலவுகளையும் குறைத்துக்கொள்ளலாம். எந்தவொரு கட்சிக்கும் அநீதியும் ஏற்படாது - என்றார். (அ-எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நரேன் அதிரடியில் சுருண்டது டெல்லி

**ஐ.பி.எல். ரி-20 கிரிக்கெட் தொடரில் நேற்று நடந்த ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 106 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும், டெல்லி கப்பிட டல்ஸ் அணியும் மோதிக்கொண்டன.**

நேற்று இரவு 7.30 மணிக்கு ஆரம்பித்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது. சுனில் நரைன் பில் சால்ட் இணை களமிறங்கியது. சுனில் நரைன் சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தார். பில் சால்ட் 18 ஓட்டங்களு டன் பவிலியன் திரும்பினார்.

அடுத்து வந்த அங்கிரிஷ் ரகுவன்ஷி, சுனில் நரைனு டன் கைகோர்த்தார். இவர்கள் இருவரும் அடித்து நொருக்க ஒரு விக்கெட் இழப்புக்கு 10 பந்துப்பரிமாற் றங்கள் முடிவில் 135 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது கொல்கத்தா. ஐ.பி.எல். தொடரில் 10 பந்துப்பரிமாற் றங்களில் எடுக்கப்பட்ட 3ஆவது அதிகபட்ஷ ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

7 சிக்கஸர்களை விளாசி 85 ஓட்டங்களைக் குவித்த சுனில் நரைன் 13ஆவது பந்துப்பரிமாற்றத்தில் மிட் செல் மார்ஷிடம் விக்கெட்டைப் பறிகொடுத்தார். அவ ரைத் தொடர்ந்து ரகுவன்ஷி 54 ஓட்டங்களுடன் வெளி யேறினார். 15 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து கொல்கத்தா 195 ஓட்டங்க ளைப் பெற்றிருந்தது.

அதன்பின்னரும் டெல்லிக்கு நல்லகாலம் பிறக்க வில்லை. ரஸல் மற்றும் ஸ்ரேயஸ் ஐயர் இணைப்பாட் டம் அமைக்க, ரஸல் அதிரடி ஆட்டம் ஆடினார். ஸ்ரேயஸ்ஸும் தன் பங்குக்கு டெல்லி பந்துவீச்சாளர் களை நோக வைத்தார். ஆனால் அவரை 18 ஓட்டங் களுடன் பவிலியன் திருப்பினார் கலீல் அகமது. அடுத்து வந்த ரிக்கு சிங் 3 சிக்ஸர்களை விளாசி 28 ஓட்டங்களுடன் திரும்பினார். அடுத்த பந்துப்பரிமாற் றத்தில் ரஸல் 41 ஓட்டங்களுடன் போல்ட் ஆனார். அதே பந்துப்பரிமாற்றத்தில் ரமன்தீப் சிங் 2 ஓட்டங்க ளுடன் நடையைக் கட்டினார்.

ஆட்டத்தின் இறுதியில் கொல்கத்தா அடுத்தடுத்து விக் கெட்டுக்களைப் பறிகொடுத்தது. 20 பந்துப் பரிமாற் றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது.

டெல்லி அணி சார்பில் அன்ரிச் நோர்க்கியா 3 விக் கெட்டுகளையும், இஷாந்த் சர்மா 2 விக்கெட்டுகளை யும், மிட்செல் மார்ஷ், கலீல் அகமது ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

273 என்ற இமாலய இலக்கை நோக்கிக் களமிறங்கிய டெல்லி ஆரம்பத்திலேயே தடுமாற ஆரம்பித்தது. ஆரம்ப வீரர்களாக டேவிட் வோர்னர் மற்றும் பிரித்வி ஷா களமிறங்கினர். டேவிட் வோர்னர் ஒரு சிக்ஸருடன் 18 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது போல்ட் ஆனார். பிரித்வி ஷா 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த மிச்செல் மார்ஷ் மற்றும் அபிஷேக் போரல் ஓட்டமெதுவும் பெறாமலேயே நடையைக் கட் டினர். ஒரு கட்டத்தில் டெல்லி 6 பந்துப் பரிமாற்றங்க ளில் 4 விக்கெட்டுக்களை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றுத் தட்டுத்தடுமாறியது. அதன்பின்னர் அணித் தலைவர் ரிஷப் பண்ட், ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ் இணை சற்று நிலைத்து ஆடியது. ரிஷப் பண்ட் அதிரடியாக ஆடினார்.

ரிஷப் பண்ட் 5 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் என 25 பந்துக ளில் 55 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ் 32 பந்துகளில் 54 ஓட் டங்களைச் சேர்த்திருந்தபோது விக்கெட்டைப் பறிகொடுத்தார். அதன்பின்னர் வந்த அக்ஷர் பட் டேல் வந்தவேகத்தில் ஓட்டம் எதுவும் பெறாது நடையைக் கட் டினார். அதன்பின்னர் வந்தவர் கள் சோபிக்கவில்லை. இறுதி யில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணி 17.2 பந்துப் பரிமாற்றங்களில் 166 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொ டுத்தது. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 106 ஓட்டங்க ளால் வெற்றிபெற்றது. (எ)

# தரம் 2 மாணவன் சிகிச்சையில்!

## ஆசிரியை மீது குற்றச்சாட்டு

வவுனியா, ஏப்.4

ஆசிரியை தாக்கியதால் பாதிக்கப்பட்டார் என்று கூறப்படும் மாணவன் ஒருவன் வவு னியா மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளான்.

வவுனியாவில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் இரண்டில் கற்கும் மாணவன் ஒருவனே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

மாணவனின் தலையிலும், முகத்திலும் காயங்கள் காணப்பட்டதை அடுத்து, பெற் றோர் விசாரித்தபோது ஆசிரியை தாக்கி னார் என்று மாணவன் கூறினான் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக ஆசிரியையிடம் கேட்ட போது, அவர் பொறுப்புடன் பதிலளிக்க வில்லை என்று மாணவனின் பெற்றோர் கூறுகின்றனர். மாணவன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், மருத்துவமனைப் பொலிஸாரிடம் இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது என்றும் மாணவனின் பெற்றோர் தெரிவித்தனர். (எ-110)

**வேலையாள் தேவை**

வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு வேலைக்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- **076 264 4237**

(CS54820) J-1

**வாடகைக்கு**

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் 1 அறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. வாகனங்கள் நிறுத்தக்கூடிய சகல வசதிகளும் உண்டு.

தொடர்பு:- **076 311 8857**

(CS54818) J-1

**மாபெரும் வேலை வாய்ப்பு**

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் 5 வகையான பதவி வெற்றிடங்கள். முந்தும் 19 பேருக்கு முன்னுரிமை

குறிப்பு

1. தகைமை : A/L
2. வயது எல்லை : 23-36

ஆண் பெண் இருபாலாரும் உடன் தொடர்பு கொள்ளவும்

**075 910 6973**

**வேலையாட்கள் தேவை**

**Legend of Arch Firm (Pvt) Ltd**

நிறுவனத்திற்கு **மேசன், கூலி ஆட்கள் தேவை.** திறமைக்கேற்ப சம்பளம் நாள் அல்லது Target அடிப்படையிலும், மேலதிக நேரக்கொடுப்பனவு (OT) அடிப்படையிலும் வழங்கப்படும்.

**077 288 4611, 076 274 7411**

**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனத்திற்கு **தொழில்நுட்ப உத்தியோகத்தர் (IT Officer) தேவை.** வயதெல்லை **21 - 28, ஆண்கள்** மட்டும் தொடர்பு கொள்ளவும். **jaffna@lionagents.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு சுயவிபரக் கோவையை அனுப்பவும்.

தொடர்பு:- **075 721 7776**

(CS54819) J-1

# மரண அறிவித்தல்



## இரத்தினராசசிங்கம் கிருஷ்ணவேணி (விமலா)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் மற்றும் பொன்னையா வீதி, பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினராசசிங்கம் கிருஷ்ணவேணி அவர்கள் கடந்த 31.03.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சீனியர் - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினராசசிங்கம் (குஞ்சன்) அவர்களின் அன்பு மனைவியும், நீரஜா (லண்டன்), ராஜகாந்தன் (ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), சிந்துயா (ஆசிரியர், யா/இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மோகனதாஸ் (லண்டன்), ஜெனனி (அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்.தொல்லியல் திணைக்களம்), கஜேந்திரன் (பஸ் உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், துவிஷ்கன், அபிஷன், சபினேஸ், மதுஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அமரர் இரத்தினபரராசசிங்கம் - பத்மாவதி, திருபாலசிங்கம் (சந்திரன்) -கலாநிதி (செல்வம்), குணபாலசிங்கம் - மாலினி, விஜயசிங்கம் (லோகன்) - புஸ்பவதனி, துரைசிங்கம் (தேவன்) - சுமணா ஆகியோரின் அன்பு மைத்துனியும், கமலவேணி - சின்னத்துரை, பேபி சரோஜாதேவி - இந்திரன், செந்தூர்செல்வன் -உஷா, கோமலவதி - மகேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அன்னமுத்து, பொன்னம்பலம், தங்கமுத்து, பூமணி, மனோன்மணி, சரஸ்வதி ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2024) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொன்னையா வீதி,**
**பன்னாலை.**
**077 901 8304**

(CS 00118) S-1

தகவல்:
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.04. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.